ttp://www.maalaimalar.com RNI.No.42526/83

மாலை மலர்

இந்தியாவின் No.1 மாலை நாளிதழ்

MAALAI MALAR

சென்னை 4-10-2025 (சனிக்கிழமை) 10 பக்கம் ₹ 5 ★ | மலர் 48 இதழ் 292

CHENNAI 4-10-2025 (SATURDAY) 10 PAGES ₹ 5 | VOL: 48 ISSUE: 292




# ஸ்ரீராம் பொறியியல் கல்லூரியில் ஹேக்கத்தான் போட்டி

திருமழிசை, அக்.4—

ஸ்ரீராம் பொறியியல் கல்லூரியின் கணிப்பொறியியல் துறை சார்பில் திங்கினிட்டி ஹேக்கத்தான் போட்டி தலைமை விருந்தினர் சென்னை, டெக்னோசைன் நெட்வொர்க்கிங் கன்சல்டன்சி கிளவுட் ஸ்மார்ட் மொபிலிட்டி முனைவர் ஆர்.பூவேந்திரன், தலைமையிலும் ஸ்ரீராம் பொறியியல் கல்லூரி முதல்வர், முனைவர். பி. ஆர்.ரமேஷ் பாபு, கணிப்பொறியியல் துறை தலைவர் முனைவர். பி. மகேஷ், கணிப்பொறியியல் துறை பேராசிரியர் முனைவர் என்.ஆர்.சங்கர் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற்றது.

கணிப்பொறியியல்துறை பேராசிரியர் முனைவர். எம்.குமார் வரவேற்று பேசினார். கணிப்பொறி அறிவியல் துறை திட்ட தலைவர் ஏ.லாவண்யா தலைமை விருந்தினரை அறிமுக படுத்தி உரையாற்றினார். இளம் புதுமை ஆர்வலர்களை ஒன்றிணைத்து, அவர்களின் தொழில்நுட்பத் திறன்கள், படைப்பாற்றல் மற்றும் உடனடி குறைதீர்க்கும் திறன்களை வெளிப்படுத்தும் விதமாக இந்நிகழ்ச்சி அமைந்திருந்தது.

அணிக்கு 4 உறுப்பினர்கள் என, புதுமை சாத்தியக் கூறு, தொழில்நுட்ப செயல்படுத்துதல் மற்றும் விளக்கக் காட்சி திறன்கள் ஆகியவற்றை மையமாக கொண்டு இந்நிகழ்ச்சி தொடங்கப்பட்டது. எஸ்.ஏ.பொறியியல் கல்லூரி, கொங்குநாடு பொறியியல் கல்லூரி, டி., எம்.ஜி. பொறியியல் கல்லூரி, அட்டல்லோ பொறியியல் கல்லூரி, சவிதா பல்கலைக்கழகம், ராஜலட்சுமி பொறியியல் கல்லூரி, பிரத்யூஷா பொறியியல் கல்லூரி, பனிமலர் பொறியியல் கல்லூரி, ஜி.ஆர்.டி. இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி, வேலம்மாள் இன்ஸ்டிட்யூட் ஆப் டெக்னாலஜி, திருச்சி எம்.ஜி.இ.டி.பொறியியல் கல்லூரி, ஜெயா பொறியியல் கல்லூரி என 35—க்கும் மேற்பட்ட கல்லூரிகளை சார்ந்த மாணவ — மாணவிகள் பங்கு பெற்றனர்.

சிறந்த வெற்றியாளர்களுக்கு பரிசும், பாராட்டு சான்றிதழும் வழங்கப்பட்டது. முதல் பரிசாக சென்னை சவிதா பல்கலைக் கழகத்துக்கு ரூ.5000, வேலம்மாள் இன்ஸ்டியூட் ஆப் டெக்னாலஜிக்கு 2—ம் பரிசாக ரூ.3000, ராஜலட்சுமி பொறியியல் கல்லூரிக்கு 3—ம் பரிசாக ரூ.1500 நான்காம் பரிசாக ஸ்ரீராம் பொறியியல் கல்லூரி மற்றும் பிரத்யூஷா பொறியியல் கல்லூரிக்கு ரூ.750 வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைத்து பங்கேற்பாளர்களுக்கும் அவர்களின் அர்ப்பணிப்பு மற்றும் புதுமையான மனப்பான்மைக்காக பாராட்டுகளைப் பெற்றனர்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை மாணவ ஒருங்கிணைப்பாளர்கள் செய்திருந்தனர். முடிவில் கணிப்பொறியியல் துறையின் உதவி பேராசிரியர் பிரவீனா நன்றி கூறினார்.